2023 அக்டோபர் 10]

இருந்தாலும், துறை சார்ந்து அதற்கான சாத்தியக்கூறு என்ன என்பதை அறிந்துகொள்வோம்.

அதேபோன்று, கட்டடங்கள் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நான் சொன்ன பதில்தான் எல்லாவற்றிற்கும் பொருந்தும். ஆக அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும்பொழுது, ஏற்கெனவே சட்டமன்றத்தில் இருக்கின்ற பல்வேறு இயக்கத்தைச் சார்ந்திருக்கிறவர்கள் இந்தக் கட்டடங்களைப் புதுப்பித்துத் தரவேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதை நாங்கள் நிறைவேற்றித் தருகிறோம். அதுமட்டுமல்லாமல், **166** கோடி ரூபாய் *Maintenance and Repair (M&R)*–க்கு என்று தனியாக ஒதுக்கீடு செய்து, ஒவ்வொரு *CEOs*–க்கும் நாங்கள் அனுப்பியிருக்கிறோம். உடனடியாகச் செய்ய வேண்டிய பணிகளுக்காக நம்முடைய *CEOs* மூலமாக அந்த நிதி ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணிகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். வருங்காலத்தில் நீங்கள் கேட்கின்ற பள்ளிக்கூடக் கட்டடங்கள், புதிய வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிவறைகள் என எதுவாக இருந்தாலும் உடனடியாகக் கட்டுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் நாங்கள் செய்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 216, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

216—

குடமுழுக்கு

***52502—திரு. ஆ. அருண்மொழிதேவன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரியில் உள்ள அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

புவனகிரியில் அமைந்திருக்கின்ற வேதபுரீஸ்வரர் திருக்கோயிலுக்கு வல்லுநர் குழுவின் பரிந்துரை பெறப்பட்டிருக்கின்றது. கூடியவிரைவில் அந்தத் திருக்கோயிலுக்குத் திருப்பணி ஆரம்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன் அவர்கள்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். புவனகிரியிலுள்ள அருள்மிகு மீனாட்சி உடனுறை வேதபுரீஸ்வரர் திருக்கோயில் சுமார் 800 ஆண்டுகள் பழமையானது. இத்திருக்கோயில் சோழப் பேரரசர்களால் கட்டப்பட்டது. இக்கோயில் பரசுராமருக்கு சிவபெருமான் காட்சி கொடுத்த ஸ்தலமாகவும், சிதம்பரம் கோயிலுக்கு முற்பட்டதாகவும் நம்பப்படுகிறது. அஸ்தம் நட்சத்திரக்காரர்களின் பரிகாரத் தலமாக விளங்குகிற இத்திருக்கோயிலில், மாசி மாதத்தில் மாசி மகம் முக்கியத் திருவிழாவாக நடைபெற்று வருகிறது. எனவே, இத்திருக்கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு நடத்த விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புவனகிரி வட்டம், கீழ்வளையமாதேவி ஊராட்சியில் உள்ள வானவகோடீஸ்வரர் கோயிலும் மிகவும் பழமையான, தொன்மையான திருக்கோயிலாகும். எனவே, புகழ்பெற்ற வானவகோடீஸ்வரர் திருக்கோயிலையும் புனரமைத்து, குடமுழுக்கு செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் கோரிய வேதபுரீஸ்வரர் கோயில் என்பது, 1960 ஆம் ஆண்டு*

2023 அக்டோபர் 10]

குடமுழுக்கு நடைபெற்ற கோயிலாகும். ஆகம விதிப்படி, 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற வேண்டிய குடமுழுக்குகள் அனைத்தையும் நடத்த வேண்டுமென்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, கிட்டத்தட்ட 63 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தத் திருக்கோயில் இப்போதுதான் திருப்பணிக்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய மற்றொரு திருக்கோயிலான வளையமாதேவி திருக்கோயிலும் திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது. இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளர் பொது நல நிதியிலிருந்து 31 இலட்சம் ரூபாய் அந்தத் திருப்பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. வெகு விரைவில் அந்தத் திருப்பணி மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன் அவர்கள்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது புவனகிரி தொகுதியிலுள்ள வடதலைக்குளம் என்ற கிராமத்தில் அருள்பாலித்து வருகின்ற அய்யனார் திருக்கோயில் முற்றிலும் சிதிலமடைந்து சேதமாகியுள்ள நிலையில், அரசினுடைய நிதியை எதிர்பார்க்காமல், வடதலைக்குளம் கிராம மக்களே ஒன்று சேர்ந்து அதைப் புதுப்பிக்க, தங்களுடைய சொந்தச் செலவிலே திருப்பணியைச் செய்துகொள்ள தயாராக உள்ளனர். எனவே, அந்த அய்யனார் திருக்கோயிலைப் புனரமைக்க, உரிய அனுமதியை அரசு உடனடியாக வழங்குமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூன்று திருக்கோயில்களைப் பற்றி இங்கே கூறினார்கள். அதில் ஒன்று, வேதபுரீஸ்வரர் திருக்கோயில், இன்னொன்று அய்யனார் திருக்கோயில், மற்றொன்று வளையமாதேவி திருக்கோயில் ஆகும். இந்த 3 திருக்கோயில்களும் இந்த ஆண்டு இறுதியில் டிசம்பர்

மாதத்திற்குள் திருப்பணிக்காக எடுத்துக்கொள்ளப்படும் என்ற நற்செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையிலே இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், நன்கொடையாளர்கள், உபயதாரர்கள் அதிகளவில் திருக்கோயில் திருப்பணி செய்ய வருகை தருகிறார்கள். இதுவரையில், இந்த ஆட்சி ஏற்பட்ட 28 மாதங்களில், 600 கோடி ரூபாய்க்கு மேலாக திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்ள உபயதாரர்கள் வருகிறார்கள் என்றால், (மேசையைத் தட்டும் ஒலி) உபயதாரர்கள் தருகின்ற நிதி முறையாக திருக்கோயிலுக்குச் செலவிடப்படுகிறது என்ற நம்பிக்கையால்தான் இவ்வளவு பெரிய தொகை உபயதாரர்களிடமிருந்து நிதியாகப் பெறப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) திருக்கோயில்கள் புனரமைக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய 3 திருக்கோயில்களுக்கும் இந்த ஆண்டு இறுதிக்குள் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 218, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

218—

உள்ளூர் மக்களுக்கு அனுமதி

***53137—முனைவர் இசக்கி சுப்பையா:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி, பாபநாசத்தில் உள்ள அருள்மிகு சொரிமுத்து அய்யனார் திருக்கோயிலுக்கு உள்ளூர் மக்கள் சென்றுவர கட்டணமில்லா அனுமதி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,